# நுண்ணுயிர் கொல்லிகளை அவதானத்துடன் பயன்படுத்துவது அவசியமாகும்.

சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள்

மனிதர்களிலும் விலங்குகளிலும் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் நுண்ணுயிர் கொல்லிகள் அத்தியாவசியமான மருந்துப்பொருட்களாகும்.

தற்போது இவை தாக்குத்திறனை விரைவாக இழந்து வருகின்றன.

- நுண்ணுயிர்க்கொல்லிகள், அளவுக்கதிகமாகவும் தவறான முறையிலும் பயன்படுத்தப்படுவதால் நோய்க்கிருமிகள் குறித்த நுண்ணுயிர் கொல்லிகளுக்கெதிராக எதிர்பபு சக்தியை உருவாக்கும் அபாயம் ஏற்படுகின்றது. இவ்வாறு எதிர்ப்பு சக்தி பெற்றுக்கொள்ளப்பட்டால் நோய்க்கிருமிகளுக்கு எதிராக நுண்ணுயிர்கொல்லிகள் தொழிற்பட முடியாததால் அவற்றினை சிகிச்சைக்காக பயன்படுத்தமுடியாத நிலை ஏற்படுகின்றது. இந்நிகழ்வு நுண்ணுயிர்கொல்லிகள் எதிர்ப்பு சக்தி (AMR) எனப்படும்.
- AMR மனிதன் மற்றும் சகல தரைவாழ், நீர்வாழ் விலங்குகளின் சுகாதாரத்துக்கும் பொதுநலத்துக்கும் அச்சுறுத்தலாகும். அத்துடன் அதிகரித்துக்கொண்டிருக்கும் (AMR) நுண்ணுயிர் கொல்லிகள் எதிர்ப்பு சக்திக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய நுண்ணுயிர் கொல்லிகளின் கண்டுபிடிப்பும் உருவாக்கமும் நடைபெறுவதில்லை.
- ஆகையால் பாவனையிலுள்ள நுண்ணுயிர்கொல்லிகளையும் அவற்றின் வினைத்திறனையும் பாதுகாப்பது அத்தியாவசியமானது.

## நீங்கள் எமக்குத் தேவை

“நுண்ணுயிர்க்கொல்லிகள் விநியோகத்தர்களாக இப்பாரியசெயலில் பங்காளி ஆகுங்கள்”



- இந்த விலைமதிப்பற்ற மருந்துகளை பொறுப்புடனும் துல்லியமான அளவிலும் விலங்குகளில் பயன்படுத்தி மனிதர்களினதும் விலங்குகளினதும் சுகாதாரத்தினையும் பொதுநலத்தினையும் பேணுவதற்கு உதவுக.

- நுண்ணுயிர்கொல்லிகளுக்கெதிராக எதிர்ப்புசக்தியைக் கொண்ட நோய்க்கிருமிகளை பொருத்தமான முறையில் கையாளுவது உலக விலங்கு சுகாதார நிறுவனத்தின் (OIE) முக்கிய நோக்கமாகும். எனவே உலக விலங்கு சுகாதார நிறுவனம் OIE அறிமுகப்படுத்தியுள்ள சர்வதேச நியமங்களை பின்பற்றி நுண்ணுயிர்கொல்லிகளின் வினைத்திறனை பாதுகாக்க உதவுங்கள்

@ மேலதிக விபரங்களுக்கு: **www.oie-antimicrobial.com**

# மொத்த மற்றும் சில்லறை விநியோகத்தர்களே நுண்ணுயிர் கொல்லிகளை அவதானத்துடன் பயன்படுத்துவது அவசியமாகும்.

சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்கள்

- நுண்ணுயிர்க்கொல்லிகளின் விநியோகம் பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டியதாகையால் நீங்கள் அவற்றின் வினைத்திறனை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி அறிந்திருக்க வேண்டும். உயர்தராதரங்கொண்ட மருந்துகளை மட்டும் கால்நடை மருத்துவரின் மருந்துசீட்டின், பிரகாரம் மட்டுமே விநியோகஞ்செய்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளீர்கள்
- நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புச்சக்தி உருவாகுவதையும், பரவுதலையும் கட்டுப்படுத்தும் அதேவேளை, விலங்கு சுகாதாரத்தையும் விலங்கு நலன்புரி நடவடிக்கைகளையும் முன்னேற்றும் நோக்கிலான நடவடிக்கைகளையும் சிபாரிசுகளையும் உள்ளடக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நுண்ணுயிர்க்கொல்லி சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் தங்கள் பொறுப்பிலும், கட்டுப்பாட்டிற்குள்ளும் உங்கள் தலைமைத்துவமும் தலையீடும் அவசியமாகும்.

## மொத்த மற்றும் சில்லறை விநியோகத்தர்களே !

1. அனுமதிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே மருந்துகளைப் பெற்றுக்கொள்க.
2. நுண்ணுயிர் கொல்லிகளைக் களஞ்சியப்படுத்தல், கொண்டுசெல்லின் போது தேவையான சிபாரிசு செய்யப்பட்ட நடவடிக்கைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
3. இணையமூலமான விற்பனை அடங்கலாக கால்நடை மருத்துவரின் மருந்துசீட்டின், பிரகாரம் மாத்திரமே மருந்துகள் விற்பனை செய்வதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
4. சகல மருத்துவ பொருட்களும் பொருத்தமான முறையில் பெயரீட்டு சீட்டினை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
5. விளம்பரப்படுத்துதல் ஒழுங்கு விதிகளுக்கமைவாகவும் பொறுப்புள்ள துல்லியமான பாவனை கொள்கைகளுக்கு ஏற்றமுறையில் விளம்பரம் செய்தல் வேண்டும்.
6. (வழங்குநர், மருந்துசீட்டளிப்பவர், பாவனையாளர், பொருளின் பெயர், தொகுதி இலக்கம் அளவு மற்றும் காலவதியாகும் தினம் ஆகிய) விரிவான பதிவேடுகளை பேணுதல் வேண்டும்.
7. விற்பனை மற்றும் விநியோகம் சம்பந்தமாக தகவல்களையும் தரவுகளையும் பரிமாறி மருந்துகள் பாவனை பற்றி மதிப்பீடு செய்ய பொருத்தமான அதிகாரிகளுடன் இணங்கி ஒத்துழைப்பது அத்தியாவசியமானது.
8. சகல ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் தேவையான தகமைகளை கொண்டிருப்பதையும் மருந்துகள் கையாள்வதிலும், களஞ்சியப்படுத்துவதிலும் கொண்டுசெய்வதிலும் தேவையான பயிற்சியினை வழங்குவதிலும், தேவையான பயிற்சியையனை பெறுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.


Funded by UK Government
WORLD ORGANISATION FOR ANIMAL HEALTH
*Protecting animals, preserving our future*